பக்கங்கள் 18+2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | ஆனி 23 திங்கட்கிழமை 07.07.2025 | அதிர்வு 338

### நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட

## சிறைக் கைதி தப்பியோட்டம்

வழக்கு விசாரணைக்காகக் காலியில் உள்ள எல்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டசிறைச்சாலை கைதி ஒருவர் சிறைச்சாலை 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### வடக்கு, கிழக்கில் போரால்

# பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வேண்டும்!

### நீதி அமைச்சர் ஹர்ஷன வலியுறுத்து



வடக்கு, கிழக்கில் ஆயுதப் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயுதப் போரால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக் கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். பலர் அங்கவீனமடைந்துள்ளனர். எனவே, ஆயுதப் போராட்டத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். 02▶



## நீரில் மூழ்கி 2 சிறுவர்கள் உயிரிழப்பு!

உமா ஓயாவில் நீராடிக்கொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று வெலிமடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

10 வயதுடைய இரண்டு சிறுவர்களே இந்த அனர்த்தத்தில் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பில் வெலிமடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## டிரான் அலஸுக்கு கொலை மிரட்டல்!



முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்குப் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து தொலைபேசி மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி டுபாயில் வசிக்கும் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த நபரிடம் இருந்து முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்குப் பல கொலை அச்சுறுத்தல்கள் தொலைபேசி மூலம் வந்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

டிரான் அலஸ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருந்த கால கட்டத்தில் எடுத்த நடவடிக்கைகள், குறிப்பாக நாட்டை விட்டு வெளியேறிய பாதாள உலகக் கும்பல் தலைவர்கள் மற்றும் அவர்களது சகாக்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான அவரது உத்தரவுகள் தொடர்பில் இந்த அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அவர் பதில் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்குமாறு பொலிஸாருக்குப் பதில் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

# துமிந்தவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் அமைச்சர் துமிந்த திஸா நாயக்க உள்ளிட்ட மூவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதி வான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட மூவரும் இன்று நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள சொகுசு தொடர் மாடி குடியிருப்பு ஒன்றில் நிறுத்தி வைக் கப்பட்டிருந்த காரில் இருந்த பெண்ணி டம் இருந்து தங்கமுலாம் பூசப்பட்ட ரி – 56 ரகத் துப்பாக்கி ஒன்று பொலிஸா ரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப் படையில், முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கொழும்பு – பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வைத்து மே மாதம் 23 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை விளக்கமறியலில் வைக்க நீதி மன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட்டிருந்த துமிந்த திஸாநாயக்க, சுகயீனம் காரணமாக மே மாதம் 25ஆம் திகதி சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மே மாதம் 28ஆம் திகதி மீண்டும் மகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.



# மட்டக்களப்பில் பஸ் மோதி 7 வயது சிறுவன் உயிரிழப்பு

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உறுகாமம் பகுதியில் பஸ் மோதியதில் ஏழு வயதுடைய பி.கவிசேக் எனும் சிறுவன் உயிரிழந்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தாயும் இரண்டு பிள்ளைகளுமாக மகோயாவுக்குச் சென்று பிற்பகல் ஒரு மணியளவில் அங்கிருந்து மீண்டும் பஸ்ஸில் உறுகாமம் வந்து இறங்கும் போது முதலில் 7 வயதுடைய மகனை இறக்கி வீதியோரம் நிறுத்திவிட்டு, மற்றைய பெண் (வயது 1) பிள்ளையை இறக்குவதற்காகத் தாய் பஸ்ஸினுள் ஏறியபோது, வீதியோரமாக நின்ற மகன் பஸ்ஸுக்கு முன்பாகச் சென்று வீதியைக் கடந்து செல்ல ஓடுகையில், பின்னால் வந்த தனியார் பஸ் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகிய நிலை யில் கரடியனாறு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று மேலதி சிகிச்சைக் காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்கையில் ஏறாவூர் பிரதேசத்தில் வைத்து மரண



மானதால் ஏறாவூர் ஆதார வைத்திய சாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டி ருந்தது.

கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக் கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற மரண விசாரணை அதிகாரி எம்.எஸ். எம். நஸீர் விசாரணைகளை மேற் கொண்டு பிரேத பரிசோதனைக்கா கச் சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லு மாறு பொலிஸாரைப் பணித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சிறைக் கைதி...**

அதிகாரிகளிடம் இருந்து தப்பிச் சென் றுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

தப்பிச் சென்ற சிறைச்சாலை கைதி மொனராகலை செவனகல பிரதேசத் தைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரி வித்தனர்.

இந்தக் கைதி கடந்த மே மாதம் 29 ஆம் திகதி எல்பிட்டிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் கதவை உடைத்துத் தங்க நகைகளைத் திருடிய குற்றச்சாட் டில் எல்பிட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மே மாதம் 30 ஆம் திகதி எல்பிட்டிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் காலி சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், இந்தச் சிறைச்சாலை கைதி வழக்கு விசாரணைக்காக எல்பிட் டிய நீதிவான் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது சிறைச்சாலை அதி காரிகளிடம் இருந்து தப்பிச் சென்றுள் ளார்.

தப்பிச் சென்ற சிறைச்சாலைக் கைதி யைக் கைது செய்வது தொடர்பில் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**பாதிக்கப்பட்ட...**

அந்த நீதியை எதிர்பார்த்தே தேசிய மக்கள் சக்தி அரசுக்குத் தமிழ் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். எனவே, அவர் களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது அரசின் முக்கிய பொறுப்பாகும்.” – என்றார்.



# வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம்

(கி.வசந்தன்)

வவுனியா, சூடுவெந்தபுலவு, மினாநகர் மக்கள் தமது பிரதான வீதியைப் புனரமைத்துத் தருமாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மினாநகர் பிரதான வீதியானது நெளுக்குளம் – நேரியகுளம் வீதியில் சந்திக்கும் சந்தியில் இந்தப் போராட்டம் இன்று இடம்பெற்றது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

“சூடுவெந்தபுலவு, மினாநகர் கிராமமானது 2013 ஆம் ஆண்டு குடியேற்றம் செய்யப்பட்ட கிராமம் ஆகும். இந்தக் கிராமத்தின் பிரதான வீதியானது 12 வருடங்களாகப் புனரமைப்பு செய்யப்படாமல் உள்ளது. தினசரி கல்குவாரி டிப்பர் வாகனம் செல்வதால் கிராமத்தின் பிரதான வீதியானது சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

இங்கு சுமார் 200 இற்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருவதுடன், தினமும் 50 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள், நோயாளிகள் எனப் பலரும் இந்த வீதியால் பயணிக்கின்றனர். அண்மையில் ஒரு மாணவன் மோசமான நிலையில் விபத்துக்குள்ளாகி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே, எங்களுக்கு இந்த வீதி தொடர்பான தெளிவை ஏற்படுத்தி வீதியைச் சிறப்பான முறையில் அமைத்துத் தந்து கல்குவாரி செல்லும் கனரக வாகனங்களுக்கு வேறு பாதை அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.” – என்றார்.

கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு வருகை தந்த ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முத்து முகமது, செட்டிகுளம் பிரதேச சபை தவிசாளர் இம்தியாஸ் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் ஆகியோர் மக்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்ததுடன், செட்டிகுளம் பிரதேச சபை ஊடாகக் குறித்த வீதியைப் புனரமைத்து தருவதாகவும், கல்குவாரி தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் உறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் போராட்டத்தைக் கைவிட்டுச் சென்றிருந்தனர்.













# சிலாபம் கடலில் தத்தளித்த 4 இந்திய மீனவர்கள் மீட்பு!



சிலாபம் கடலில் தத்தளித்த நான்கு இந்திய மீனவர்களை இலங்கைக் கடற் படையினர் பத்திரமாக மீட்டுள்ளனர்.

கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தில் இருந்து கிடைத்த தகவலுக்கமைய இலங்கைக் கடற்படையால் ஒருங்கிணைந்த தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டது. இந்நிலையில், நேற்று ஞாயிற் றுக்கிழமை நான்கு இந்திய மீனவர் களும் பத்திரமாக மீட்கப்பட்டனர் எனக் கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த ஜுன் மாதம் 29 ஆம் திகதி சீரற்ற காலநிலையால் இந்திய மீன்பிடிக் கப்பல் காணாமல்போனதாக மும்பை கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கி ணைப்பு மையத்தில் இருந்து கொழும் பில் உள்ள கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு அறிவிக் கப்பட்டது.

இதனையடுத்து, இலங்கைக் கடற் படை உடனடியாக அனைத்து தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளையும் மேற் கொண்டது. அதன்படி, மேற்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட விரைவுத் தாக்குதல் கப்பல்களால் விசேட தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன் விளைவாக, சிலாபத்திற்கு அப்பால் மேற்குக் கடலில் பாதிக்கப்பட்டுச் செயற்படாமல் இருந்த இந்திய மீன்பிடிக் கப்பல் அவதானிக்கப்பட்டதுடன், மேலும் அதில் இருந்த நான்கு இந்திய மீனவர்கள் கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப் பட்டனர்.

மீனவர்கள் இந்தியாவின் மினிகாய் தீவில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

நான்கு மீனவர்களும் திக்கோவிட்ட துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டுள்ள னர். அங்கு கடற்படை மற்றும் கடலோரக் காவல் படை தேவையான உதவிகளை அவர்களுக்கு வழங்கியுள்ளது.

ஆரம்ப வைத்திய பரிசோதனைகளுக் குப் பின்னர் மீனவர்கள் மேலதிக நட வடிக்கைகளுக்காக வத்தளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள னர்.

கடந்த இரண்டு வாரங்களுக்குள் கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துடன் இணைந்து இந்திய மீனவர்களை இரண்டாவது முறை யகாக இலங்கைக் கடற்படை பத்திரமாக மீட்டுள்ளது.













# கிழக்கில் தனியார் பஸ்களின் சேவை தொடர்பில் முறையிடலாம்

## 'வட்ஸ்ஆப்' இலக்கம் அறிமுகம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

கிழக்கு மாகாணத்துக்குள் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் சேவைகள் தொடர்பில், பயணிகள் தமது முறைப்பாடுகள், கருத்துகள், ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்கு இன்று (07) முதல் புதிய 'வட்ஸ்ஆப்' நேரடி தொலைபேசி இலக்கத்தை கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அறிமுகப்படுத்தியது.

இன்று திங்கள் காலை இந்தத் தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தும் விளம்பரங்கள் மாகாண பிரதம செயலாளரால் தனியார் பஸ்களில் ஒட்டப்பட்டன.

இதன்படி 0707990799 என்ற 'வட்ஸ்ஆப்' இலக்கத்துக்குப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் எவரும் முறைப்பாடுகளையோ, ஆலோசனைகளையோ நேரடியாக அனுப்ப முடியும்.

இவ்வாறு கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பீ.ஆர்.எல். பீ.கித்சிறி நவரெட்ண கூறினார்.

இதேவேளை மாகாணத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கும் "சிசுசெரிய"பாடசாலை மாணவர் போக்குவரத்து போக்குவரத்து பஸ்களில் பயணிக்கும் மாணவர்களின் பெற்றோர், தமது பிள்ளை பயணிக்கும் பஸ்ஸின் நடமாட்டத்தைத் தமது கையடக்கத் தொலைபேசியில் நேரடியாகப் பார்வையிடுவதற்கான விசேட வசதியும் இன்று முதல் தமது அதிகார சபையால் உருவாக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான விளம்பரங்களும் சிசுசெரிய பஸ்களில் இன்று முதல் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன என்றும் அதிகார சபைத் தலைவர் மேலும் கூறினார்.

இன்று மாகாண வீதிப் பயணிகள் அதிகார சபையின் புதிய அலுவலகம் உள்துறைமுக வீதியில் உள்ள முன்னைய மாகாண பேரவைச் செயலக வளாகத்தில் மாகாண பிரதம செயலாளரால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிரத்தையுடன் செயற்படுவோம்!

சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில், இன்று முதல் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை, தேசிய விபத்து தடுப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நாட்டில் விபத்துக்களின் எண்ணிக்கையையும், அதனால் ஏற்படும் இறப்புகள் மற்றும் பாதிப்புகளையும், குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய விபத்துத் தடுப்பு வாரத்தை ஒட்டி நாடு முழுவதும் உள்ள பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் விழிப்புணர்வுப் பிரசாரங்கள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் செயன்முறைகள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன.

இன்று ஜூலை 7 ஆம் திகதி வீதி விபத்து தடுப்பு நாளாகவும், ஜூலை 8 ஆம் திகதி பணியிட விபத்து தடுப்பு நாளாகவும், ஜூலை 9 ஆம் திகதி வீடு மற்றும் முதியோர் இல்ல விபத்து தடுப்பு நாளாகவும், ஜூலை 10 ஆம் திகதி நீரில் மூழ்கும் விபத்துக்களை தடுப்பதற்காகவும், ஜூலை 11 ஆம் திகதி பாடசாலைகள், முன்பள்ளிகள் மற்றும் பகல்நேர பராமரிப்பு மையங்களில் விபத்துகளைத் தடுப்பதற்கான நாளாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அடிக்கடி விபத்துகள் நிகழும் இடங்களாக அடையாளம் காணப்பட்ட வீதிகள், பணியிடங்கள் மற்றும் நீரில் மூழ்குவதால் அடிக்கடி உயிரிழப்பு ஏற்படும் இடங்கள் குறித்து இந்த வாரத்தில்விசேட கவனம் செலுத்தப்படும் என, அறிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சு, தொற்றா நோய் பிரிவு, விபத்து தடுப்புக்கான தேசிய ஆலோசனைக் குழு மற்றும் பிராந்திய சுகாதாரப் பணிமனைகளின் பங்கேற்புடன் இந்த நடவடிக்கைகள் செயல்படுத்தப்படவுள்ளன.

இந்தக் காலகட்டத்தில், விபத்துத் தடுப்புக் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ள பல்வேறு இடங்களை ஆய்வு செய்தல் மற்றும் எதிர்காலத்தில் விபத்து அபாயத்தைக் குறைக்க குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை எடுத்தல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

இலங்கையில் ஆண்டுதோறும் நிகழும் சுமார் 145,000 இறப்புகளில், 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் பேரின் இறப்புகள் விபத்துகளால் நேருகின்றன என்று தெரிவித்துள்ள சுகாதார அமைச்சு, இது ஒவ்வொரு மாதமும் சுமார் ஆயிரம் பேர் என்றும், ஒவ்வொரு 3 மணி நேரத்திற்கும் குறைந்தது 4 பேர் என்றும் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் விபத்துகளால் ஏற்படும் 7 ஆயிரத்து 500 முதல் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இறப்புகள் வைத்தியசாலைகளுக்குச் செல்லும் முன்பே நிகழ்கின்றன என்றும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஒவ்வொரு நிமிடமும் விபத்துகளினால் பாதிப்புறும் சுமார் 6 முதல் 8 பேர் சிகிச்சைக்காக, மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகின்றனர் என அமைச்சின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அன்றாட வாழ்வில் ஏற்படும் விபத்துகளைக் கருத்தில் கொள்ளும்போது, ஒவ்வொரு இலங்கையரும் ஒவ்வொரு வருடமும் குறைந்தது ஒரு விபத்திற்கேனும் முகம் கொடுக்கலாம் என்று அது கூறியுள்ளது.

விபத்துப் பாதிப்புகள் மற்றும் மரணங்களில் கணிசமானவை சாலை விபத்துகளினால் நேருகின்றவை. அண்மைக் காலத்தில் எமனாகும் வீதி விபத்துகள் குறித்து மனதை நெருடும் செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

உயிர்களைக் காவு கொள்ளும் - அதிக வேதனையையும் விசனத்தையும் ஏற்படுத்தும் - வருடாந்தம் பல்லாயிரம் பேரை குறுகிய காலத்துக்கும், பல நூறு பேரை நிரந்தரமாகவும் ஊனமாக்கும் - இந்த விபத்துகளை முன்னெச்சரிக்கை மூலம் தவிர்த்துக் கொள்ளலாம் என்ற சிந்தனை பொதுமக்களின் மனதில் ஆழமாகப் பதிவதில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஒரு கண நேர அசிரத்தை வாழ்க்கை முழுவதுமே தன்னையும் பிறரையும் பேராபத்துக்குள்ளும் பெரும் நெருக்கடிக்குள்ளும் தள்ளிவிடும் என்ற சிந்தனை பலருக்கும் இருப்பதில்லை.

விபத்துகளின் விளைவுகள் அரசு நடத்தும் மருத்துவமனைகளில் கடுமையான அழுத்தத்தை - நெருக்கடியை - ஏற்படுத்துகின்றன. வைத்தியசாலைகளில் இருந்து பொலிஸ், நீதிமன்றங்கள் வரை அவை ஏற்படுத்தும் பொருளாதார மற்றும் சமூகச் செலவுகள் மிகப்பெரியவை. தாங்க முடியாதவை.

விபத்துகளால் பாதிக்கப்படுவோரை மீட்டெடுப்பதற்காகவே பெரும் தொகைப் பணத்தையும் மூல வளத்தையும் அரச வைத்தியசாலைகள் அள்ளிக் கொட்ட வேண்டியிருக்கின்றன.

எப்போதும் சிரத்தையுடனும் முன்னெச்சரிக்கையுடனும் நடப்பதன் மூலம் விபத்துகளைத் தவிர்த்து, நமக்கும், நம்மைச் சூழ்ந்தோருக்கும், நாட்டுக்கும் ஏற்படக் கூடிய தொல்லைகளை விலக்கிக்கொள்வோம்.

# அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் திருக்கோயில் கும்பாபிஷேகம்!

( வி.ரி. சகாதேவராஜா)

இராமகிருஷ்ண மிஷினின் மட்டக்களப்பு அன்னை ஸ்ரீ சாரதா தேவியார் திருக்கோவிலின் புனராவர்த்தன கும்பாபிஷேகம் நேற்று (6) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

40 வருடங்களின் பின் நடைபெற்ற இந்தக் கும்பாபிஷேகத்தில் இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்சராத்மானந்தா ஜீ மகராஜ் முக்கிய பிரதானியாக கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜி மகராஜ் தலைமையில் நடைபெற்ற கும்பாபிஷேக நிகழ்வில் சுவாமி இராஜேஸ்வரானந்தா ஜீ சுவாமி உமாதீசானந்தா ஜீ ஆகியோருடன் மிஷன் அபிமானிகளும் கலந்து கொண்டனர்.

அன்னை சாரதா தேவியார் திருக்கோயில் 1982 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு 1985 ஜூன் மாதம் மாதத்தில் முதலாவது கும்பாபிஷேகம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.









# தேர்த் தரிப்பிடத்துக்கு அடிக்கல் நடல்

(உடப்பு க.மகாதேவன்)

கற்பிட்டி, ஆனைவாசல் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் தேர்த் தரிப்பிடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு சனிக்கிழமை இடம்பெற்றது.

இதற்கு உரிய கிரியைகளை கிரியா தத்துவ நிதி சிவஸ்ரீ ஸ்கந்த வரதேஷ்வரக் குருக்கள், சிவஸ்ரீ இ.ரா. முரளிதரன் சர்மா ஆகியோர் கலந்து கொண்டு நடத்தி வைத்தனர்.








# வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற மாபெரும் அரைமரதன்!

(பா.சதீசன்)

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாபெரும் அரை மரதனோட்ட போட்டி நேற்று (06) முல்லைத்தீவு மாவட்ட செயலகத்ததுக்கு முன்பாக ஆரம்பமாகி குமுழமுனை மகாவித்தியாலயம் முன்பாக நிறைவடைந்தது.

தேசிய மரதனோட்ட வீரர் கந்தசாமி பத்மநாதனின் (கனடா) முற்றுமுழுதான நிதி அனுசரணையில் இடம்பெற்ற இந்த மரதன் ஓட்ட நிகழ்வானது 16 வயது தொடக்கம் 20 வயது வரையுள்ள ஆண், பெண் பாடசாலை மாணவர்களை உள்ளடக்கி இடம்பெற்றது.

விசேடமாக மரதனோட்ட வீரர்களை வளப்படுத்தும் நோக்கோடும் சாதிக்கத் துடிக்கும் இளம் சாதனையாளர்களுக்குச் சிறந்த களங்களை வழங்கும் நோக்கோடும் 14 மற்றும் 15 வயது பாடசாலை மாணவர்களுக்கான 5 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட சிறிய வீதியோட்ட நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது.

மரதனோட்டத்துறைக்கு புத்துயிர் கொடுத்து வரும் முன்னால் தேசிய மரதனோட்ட வீரரும், கனடா வாழ் குமுழமுனை கந்தசாமி பத்மநாதனின் முற்றுமுழுதான நிதி அனுசரணையில் தொடர்ந்து மூன்றாவது வருடமாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வடமாகாண ரீதியிலாக மாபெரும் அரை மரதனோட்டப் போட்டியாக இது இடம்பெற்றது.

வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கான வெற்றிக்கேடயங்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. இலக்கையடைந்த அனைத்து வீர, வீராங்கனைகளுக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் விளையாட்டும் உடற்கல்வி பிரதி கல்வி பணிப்பாளரான ராஜசீலன், மாகாண கல்வி திணைக்களத்தின் ஆரம்ப உதவி கல்வி பணிப்பாளர் ரவீந்திரன், முல்லைத்தீவு மாவட்ட உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ரி.டிலான், முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர் இ.சகீதரசீலன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஜெயவரதன் சிவசாந்தி, முன்னாள் தேசிய மரதனோட்ட வீரர் கந்தசாமி பத்மநாதன் (கனடா) , புலம்பெயர் உறவு கந்தசாமி நுட்பராசா, வடக்கு மாகாணத்தின் கல்வி வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், அதிபர், ஆசிரியர்கள் , மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.











### காலநடைகளுக்கான மேய்ச்சல்தரவை இன்மை விவகாரம்:

# அமைச்சரவையில் தீர்மானங்களை எடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்க!

## ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு



**(விஜயரத்தினம் சரவணன்)**

வன்னிப் பகுதிகளில் கால்நடைகளுக்கான மேய்ச்சல்தரவை இன்மை பாரியபிரச்சினையாகக்காணப்படும்நிலையில், குறித்த விடயத்தை அமைச்சரவைக்குக் கொண்டுசென்று தீர்மானங்களை நிறைவேற்றி கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று துரைராசா ரவிகரன் எம்.பி. ஆலோசனை தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருக்கே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மேய்ச்சல்தரவை இன்றி கால்நடைகள் மிகமோசமாகப் பாதிக்கப்படுகின்றன. அத்தோடு வீதிகள் முழுவதும் கால்நடைகள் காணப்படுவதால் பொது மக்களும் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மனிதருக்கும் காணியில்லை, கால்நடைகளுக்கும் காணியில்லாத நிலை காணப்படுகின்றது. அந்த வகையில் புள்ளி விபரங்களின்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,389 மக்களுக்குக் காணியில்லாத நிலை காணப்படுகின்றது.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் நிலப்பரப்பில் கூடிய மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டமே காணப்படுகின்றது. ஆனால் மக்களுக்கும், மாடுகளுக்கும் காணியில்லாத நிலையே காணப்படுகின்றது.

மேய்ச்சல் தரவை என்பது கட்டாயத் தேவையாகக் காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் காணப்படுகின்றன. மன்னாரில் 140,000 கால்நடைகள் வரையில் காணப்படுகின்றன. வவுனியாவில் 130,000 கால்நடைகள் காணப்படுகின்றன என்று புள்ளி விபரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

எனவே பிரதேச அபிவருத்திக்குழுத் தலைவர் இந்த விடயத்தில் கூடுதல் கவனத்துடன் செயற்படவேண்டும். இந்த விடயத்தை அமைச்சரவை மட்டங்களுக்குக் கொண்டு சென்று தீர்மானங்களை எடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.




# கல்முனை றோட்டரிக் கழகத்தால் மாணவர்களுக்கு இலவச கற்கை!






**(வி.ரி.சகாதேவராஜா)**

மட்டக்களப்பில் இயக்கிவரும் அமெரிக்க சர்வதேச பல்கலைக்கழகத்தில் கல்முனை றோட்டரிக்கழகத்தின் அனுசரணையில் வசதி குறைந்த பதினேழு மாணவர்களுக்கு இலவசமாக இரண்டு கற்கை நெறிகள் நேற்று (06) ஆரம்பித்துவைக்கப்பட்டன.

2025 - 26 ஆம் வருட புதிய தலைவர் றோட்டேரியன் இ.தரணிதரனின் வழிகாட்டலில் நடைபெறும் ஆங்கில டிப்ளோமா ( Diploma in English), மற்றும் அடிப்படை தகவல் தொழில் நுட்ப கற்கை நெறி (Basic (Information Tecnology) ஆகியவற்றுக்கு கன்பேரா றோட்டரிக்கழகம், ஆஸ்திரேலிய, கன்பேரா தமிழ்ச் சங்கம் என்பன நிதி வழங்குகின்றன.

வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நிகழ்வில் கழகத்தின் செயலாளர் றோட்டேரியன் மு. சிவபாத சுந்தரம், றோட்டேரியன் க. குகதாஸ், கழக பயிற்றுவிப்பாளர் - பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.ஜெபகுமார், முகாமையாளர் அகமட் சப்ரி மற்றும் உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்.

# திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத் திருவிழாவில் தொண்டர் படை!





**( வி.ரி. சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் இன்று (7) திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இன்று முதல் ஐம்பது பேர் கொண்ட தொண்டர் படையணி ஆலயச் சூழலில் கடமையில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு பொலிஸ் பொறுப்பதிகாரி, பிரதேச செயலாளர், ஆலய தலைவர் ஆகிய மூவரும் ஒப்பமிட்ட அடையாள அட்டை வழங்கப்படும்.

இது தொடர்பான தீர்மானம் நேற்று முன்தினம் (5) சனிக்கிழமை ஆலய மண்டபத்தில் நடைபெற்ற பஞ்சாயத்து கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய ஆடி அமாவாசை திருவிழா சம்பந்தமான பஞ்சாயத்துக் கூட்டம் ஆலயத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு தொண்டர் படை இளைஞர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன், திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஜி.பத்மகுமார, ஆலய நிர்வாக சபையினர் மற்றும் இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

அதில், பூசை உபயகாரர்கள் பூசைப் பொருள்கள் கொண்டு வருவதற்கான ஒழுங்குகளும், அடியவர்களின் பாதுகாப்பு, வீதி போக்குவரத்து, வாகனத் தரிப்பிடம், கடை வழங்குதல், பத்தர்கள் பிதிர்கடன் தீர்த்தல், அன்னதான சமையல் எனப் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டுத் தீர்க்கமான முறையில் முடிவுகள் எட்டப்பட்டன.



# 20 மில்லியன் ரூபா மதிப்புள்ள கேரளக் கஞ்சா மன்னாரில் மீட்பு!

(மன்னார் நிருபர்)

இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் படி மன்னாரில் 20 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா பொதிகள் இன்று (07) அதிகாலை மீட்கப்பட்டுள்ளன.

மன்னாரில் நேற்று நள்ளிரவு 12 மணியளவில் குற்றப் புலனாய்வுப் பிரிவு நடத்திய விசேட சோதனை நடவடிக்கையின் போது தலை மன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நடுக்குடா கடற்கரைக்கு அருகிலுள்ள 30 ஆவது காற்றாலை கோபுரத்துக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 20 மில்லியன் ரூபா மதிப்புள்ள கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் கேரள கஞ்சா பொதிகள் இந்தியாவில் இருந்து கடல் வழியாகக் கொண்டு வரப்பட்டு மறைத்து வைக்கப் பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகி யுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகத்தில் அரச கரும மொழித் திணைக்கள பயிற்சிகள்






(திராய்க்கேணி)

அரச கரும மொழித்திணைக்களத் தால் ஆரம்ப தர உத்தியோகத்தர்களுக்கான 100 மணித்தியால சிங்கள பாடநெறியின் ஆரம்ப நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் உதவிப் பிரதேச செயலாளர் கு.நஹீஜா முஷாபிர் தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.முஹம்மட் நிஸான் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நிர்வாகப் பிரிவு பிரதி முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எஸ்.சுறையா, கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.ஏ. நியாஸ், பாட போதனாசிரியர் எம்.எம். பாஸில் மற்றும் பல்வேறு திணைக்களங்களில் இருந்து வருகைதந்த ஆரம்ப தர உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# மூதூர் கிளிவெட்டி மகா வித்தியாலய குறைகளைக் கேட்ட குகதாசன் எம்.பி.!

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட கிளிவெட்டி மகாவித்தியாலயத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், அங்கு நிலவும் குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

குறித்த கண்காணிப்பு விஜயத்தில் பாடசாலைக்கான கட்டடங்கள், உள்ளக வெளியக அபிவிருத்தி தொடர்பிலும் கேட்டறிந்தார். இந்தக் குறைபாடுகளை பூர்த்தி செய்து தருவதாகவும் உறுதியளித்தார். நாடாளுமன்ற உறுப்பினரிடம் இது பற்றிய விடயங்கள் தொடர்பான மகஜரும் கையளிக்கப்பட்டது.





# மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள்

(நடராஜா மலர்வேந்தன்)

பசறை புனித யூதாத தேயு ஆலய பங்குத் தந்தை வண. எந்தனி பொன்சியஸ் அடிகளாரின் ஆதரவில் எல்டெப் கலையருவி தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கப்பட்டன.





# புனித பூமியான கதிர்காமம்!

## எதிர்வரும் 10ஆம் திகதி கதிர்காமத்தில் தீர்த்தம் இடம்பெறவுள்ளது



என். ஹரன்

உலகில் கந்தக் கடவுளின் புனித பூமியாகக் கருதப்படும் கதிர்காமம் முருக வழிபாடு தோற்றம் பெற்ற காலம் முதல் இங்கு இருந்து வந்துள்ளது என்று ஆய்வுகள் கூறுகின்றன.

முருகனைக் குறுஞ்சிக் கடவுள் என்றும் கூறுவர். முருகனின் உறைவிடங்கள் யாவும் இயற்கை எழில் கொஞ்சும் காடு, மலை, சோலை, நீரோடைகள், நதிகள், கங்கைகள், கடல்கள் போன்றவற்றின் நடுவினிலேயே அமைந்திருப்பது கண்ணூடாக காணமுடிவது சிறப்பியல்பே.

சகல இனம்களையும் கவர்ந்திழுக்கும் இயற்கை எழிலும் ரம்மியமும் நிறைந்த இடங்களாக இருப்பதால் முருகனுக்கு பக்தர்கள் கூட்டம் என்றுமே குறைவின்றி இருக்கும். முருகப் பெருமான் அம்மை அப்பனோடு எழுந்தருளி அருள் பாலிக்கும் அற்புதமான தெய்வம் உலக மக்களை ஒருங்கே ஈர்க்கும் சக்தி முருகக் கடவுளுக்கு மட்டுமே உண்டு. இதனால்தான் இன நல்லுறவு, சமத்துவமும் மிக்க அற்புத கடவுள் என்றும் அழைக்கப்படுகின்றார்.

கதிர்காமத்தில் முருகன் அருள் பாலிக்கின்றார் என்று மிக இலகுவாக எளிதாக சொல்லி விடக் கூடிய விடயமல்ல பல அற்புத சக்திகள் சூட்சுமங்கள் ஒருங்கே அமையப்பெற்ற புனித தலம்இதுவாகும் இந்தத் தலமானது எப்போது தோற்றம் பெற்றது என்று சரியாக அறுதியிட்டு கூறமுடியாதுள்ள போதிலும் கதிர்காமப்பதி இராமாயண காலத்துக்கும் முற்பட்டதும். அகத்திய மாமுனியின் காலத்துக்கும் அப்பாற்பட்டது எனவும் கூறப்படுகின்றது.

இதில் இராஜவலியவில் இருந்து இலங்கைக்கு விஜயன் வந்தபோது அவனைக் கொல்ல குவேனி சூழ்ச்சி செய்ததாகவும் அந்த சூழ்ச்சி கதிர்காம கந்தன் அருளினால் விஜயன் காப்பாற்றப்பட்டான் எனவும் கூறுகின்றது. இலங்கையின் பண்டைய நூல்களான இராஜாவலிய மகாவம்சம், கந்த உபாந்த போன்றவற்றில் கதிர்காமம் பற்றிய குறிப்புகள் உள்ளது.

தொடர்ச்சி ▼



# புனித பூமியான கதிர்காமம்!



தொடர்ச்சி ▲

**பாதாயாத்திரை**

இந்த நவீன காலத்தில் எத்தனை வாகன வசதிகள் ஏற்பட்டு விட்ட போதும் பல மாதங்களை இதற்கென ஒதுக்கி பாத யாத்திரை செய்து வழிபாடு ஆற்றும் பண்பு இன்றும் பேணப்பட்டு வருகின்றமை முருக பக்திக்கு பெரும் சான்றாகும் .

கதிர்காம உட்சவத்தை ஒட்டியதாக யால காட்டினூடாக சராசரி 50 ஆயிரம் முதல் 90 ஆயிரம் அடியார்கள் வரை பக்தி பூர்வமாக கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை செல்கின்றனர்.

இவற்றில் 80 வீதமான பக்தர்கள் உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் இருந்துதான் காட்டினூடாகப் பாதயாத்திரை பேற்கொள்வது வழமையாகி விட்டது.

நாட்டின் நாலா புறத்திலிருந்தும் மத்திய மலை நாட்டிலிருந்தும் பக்தர்கள் பாதயாத்திரையில் ஈடுபடுவார்கள் இதன்போது அமைப்புக்கள், குழுக்கள், ரீதியாகவும் ஜோடியாகவும் தனியாகவும் இந்தப் பாதயாத்திரையுனை மேற்கொள்கின்றனர்.

எனினும் இதில் யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் 54 நாள்களைக் கொண்ட வேல்சாமி தலைமை தாங்கும் குழுவினரே இலங்கையின் நீண்ட கதிர்காம பாதயாத்திரையாக இன்றும் கருதப்படுகின்றது.

இதற்குச் சான்றாக இவர்கள் வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய 03 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி , முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு , அம்பாறை, மொனராகலை ஆகிய மாவட்டங்களே யாத்திரையின் வனவழி பாதையாக அமைந்திருக்கின்றது.

**காட்டுப்பாதை அற்புதம்**

கதிர்காம வனவழிப்பாதை யாத்திரையானது கொடிய மிருகங்களின் இருப்பிடமான கானகங்களுக்கு இடையறுத்துச் செல்லும் இந்த பாதயாத்திரையில் செல்லும் பாதையெங்கும் கல்லும் முள்ளும் மணலும் புல்லும் நீரும் வனப்பும் வெயிலும் வதைக்க கந்தப் பெருமான் எங்கள் சொந்தப் பெருமான் என்று கூறிக் கொண்டு அரோகரா கோஷம் எழுப்பி தாம் கொண்டு வந்த இசைக்கருவிகளுடன் கந்தன் பாமாலை பாடியவாறு செல்வர்.

உகந்தை யால சரணாலயம் ஊடான பாத யாத்திரை கூமுனை என்ற இடத்திலிருந்தே ஆரம்பமாகின்றது.

இலங்கையில் எல்லாள மன்னனின் ஆட்சி வியாபித்திருந்த கால கட்டத்தில் எல்லாள மன்னனை வெற்றி கொள்வதற்காக மாகம இராட்சியத்தில் இருந்து விஜயன் படை கொண்டு முதலில் கதிர்காம முருகபதிக்கு வந்து முருகனை வணங்கிய பின்பே போர் தொடுத்து வெற்றிவாகை சூடினான். இந்த வெற்றிக்கு தனக்கு பேரருள் புரிந்த கந்தனுக்கு பெரும் ஆலயம் ஒன்றை அமைத்ததுடன் பெரு வெற்றி விழாவாக கொண்டாடியுள்ளான்.

இதனாலேயே கதிர்காம திருவிழா வரும் போது முருகன் யானைமீது அமர்ந்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுப்பதுடன் சுவாமிக்கு முன் யானைகள் அணிவகுத்துச் செல்வதும் சுவாமிக்கு பின்னால் குறுநில மன்னன் பிரதானிகளுடன் அணிவகுத்து வருவதும் இன்றும் வழமையாக தொடர்ந்து உள்ளது. இது தற்காலத்தில் பெரஹேர என்று அழைக்கப்படுவதுடன் இதன் போது பல மரபு ரீதியான கலை கலாசார நாட்டிய நடன இசை நிகழ்வுகள் அணிவகுத்து செல்வதும் காணக் கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த சிங்கை சேகராச சேகரன் (கி.பி. 1394 -1414)தக்ஷன கைலாய மான்மியத்தை கருப் பொருளாகக் கொண்டு தமிழில் தகஷின கைலாய புராணத்தை எழுதியுள்ளான். இதுவே கதிர்காமம் பற்றிய கூறும் பழமை வாய்ந்த ஆவணமாகும். முருகப் பெருமான் கதிர்காமத்தில் பாசறை அமைத்துத் தங்கி சூரனை வதம் செய்ததாகவும் கதிரமலையில் விஷ்வகர்மாவை கொண்டு ஆலயம் அமைத்து அதில் தான் தங்கி இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இராமாயணத்தில் சீதையை இராவணன் கடத்தி இலங்கையில் சிறைவைத்த போது, தூதனாக வந்த அனுமான் கதிர்காமத்துக்குச் சென்று வணங்கி அருள் பெற்ற பின்பே சீதையைக் காணச் சென்றான் என்ற கூற்றானது, கதிர்காமம் இராமாயண காலத்துக்கு முற்பட்டது என தெளிவாக காணக்கிடைக்கின்றது. தற்போது நாம் காணும் கதிர்காம முருகன் ஆலயம் கி.மு. 16 ஆம் நூற்றாண்டில் முதலாம் இராஜசிங்க மன்னன் காலத்தில் மன்னனின் ஆசியுடன் மூன்றாம் கல்யான கிரி சுவாமியால் புனரமைக்கப்பட்டதாகும்.

கதிர்காமத்தில் குடி கொண்டுள்ள முருகப் பெருமானின் அருட் கொடைகளை பெற்றுக் கொள்ளும் முகமாக வட இந்தியாவில் இருந்து வந்த தசநாமி பரம்பரையினர் தெய்வானை அம்மன் ஆலயத்தில் தங்கி கோவில் மடாதிபதியாக மாற்றம் பெற்றனர். இவர்கள் தெய்வானை அம்மன் ஆல

தொடர்ச்சி ▼

# புனித பூமியான கதிர்காமம்!

**தொடர்ச்சி ▲**

யத்தைப் பராமரித்து வந்தவர்களாகும். கதிர்காம முருகன் ஆலயம் , வள்ளி அம்மன் ஆலயம், பத்தினி அம்மன் ஆலயம் என்பன கப்புறாளை யால் பூசைகள் மேற்கொள்ளப்படுவதுடன் வேடுவர் களின் வழித்தோன்றல்களுக்கு பூரண அதிகாரம் அந்தஸ்தும் வழங்கப்பட்டுள்ளது.

ஆதிமூல கருவறைக்குள் பக்த்தர்கள் செல்ல முடியாது இது திரையால் மூடி மறைக்கப்பட்டுள்ளது. இது பரம இரகசியமான புனிதத்துவம்மிக்க இடமாகும். காற்றும் வெளிச்சமும் உற்புகாதவாறு துவாரமோ சாளரமோ இங்கு இல்லை. பிரதான கருவறைக்கும் மத்திய அறைக்கும் இடையே சிறு கதவுண்டு. உடன் கப்புறாளை மட்டும் பக்தி சிரத்தையுடன் செல்வார் பக்தர்கள் காணிக்கை களை செலுத்துவதற்கு மத்திய அறை வரைக்குமே அனுமதிக்கப்படுவர்.

மந்திர சக்தி இயந்திரத்தை கொண்ட வெண் பட்டு துணியால் முடிய பேழையினை யானை சுமந்து ஊர்வலம் வரும் இதன்போது விபரிக்க முடியாத சூட்ச்சும சக்தி எங்கும் பரவி பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் இதன் போது சில பக்தர்கள் மெய்மறந்து பாடி ஆட பரவசக் கண்ணிர் மல்க காவடி எடுத்து , கற்பூரம்சட்டி ஏந்தி , அங்கப்பிரதட்ஷனம் செய்து தமது பாவங்களை போக்கிக் கொள்வர்.

இன்று கதிர்காமம் புனித மண்ணில் பல ஆல யங்கள் அமையப் பெற்றுள்ள போதிலும் நாம் மனமுருகி வழிபடுகின்ற முருகன் ஆலய பூசைகள் மற்றும் அதனுடன் கூடிய சமய அனுஷ்டா னங்கள்யாவும் கப்புறாளையால் இடம் பெறுகின் றது. கப்புறாளை வாயைத் துணியால் கட்டி மௌன பூசை நடத்துவார். இதுவே கதிர்காம மரபாகவும் இருந்து வருகின்றது.

## அருணகிரிநாதரின் கதிர்காம திருப்புகழில்!

வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ் கதிர்காமம் உறைவோனே என்று பாடுகின்றார். இன்றைக்கும் கதிர்காமத்தில் பூசை செய்யும் பூசகர்களான சிங்கள பொழி பேசும் கப்புறாளை என்போர் தாங்கள் வள்ளி நாயகியின் வழிவந்த வர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமித மடைவதைக் காணலாம்.

இந்த கப்புறாளையின் கட்டுப்பாட்டில் பிரதான முருகன் ஆலயம் வள்ளி அம்மன் ஆலயம், பத்தினி அம்மன் ஆலயம் ஆகிய மூன்றும் உள்ளன. இந்த கப்புறாளை எனப்படுபவர் வேடுவர் பரம்பரையில் வந்தவர்களாவர்.

பிரதான முருகன் ஆலயத்தை ஒட்டியதாக அமைந்திருக்கும் மாணிக்கப் பிள்ளையார் ஆலயம், தெய்வானை அம்மன் ஆலயம், பழனி ஆண்டவர் ஆலயம், வைரவர் வீரபாகு தேவர் ஆலயம், காளி அம்மன் ஆலயம் , முத்துலிங்க சிவன் ஆலயம் , செல்லக்கதிர்காமம் பிள்ளையார் கோவில், கதிர மலை முருகன் கோயில் , கதிரமலை சிவன் கோவில் , ஆகிய கோவில்கள் வட இந்திய சன்னியாசி பரம்பரையால் இன்றும் பராமரிக்கப் படுகின்றது.

பிரதான கோயிலின் அருகில் அமைந்துள்ள பெருமாள் கோவிலும், கிரி விகாரையும், பௌத்த பிக்குகளால் பரிபாலிக்கப்படுகின்றன. இஸ்லாமிய பெரியார் ஒருவரின் மசூதி , பள்ளிவாசல் இஸ்லாமி யர்கலால் பராமரிக்கப்படுகின்றது .

இவை தவிர பிற்காலத்தில் பல ஆலயங்கள் கதிர்காம புனித பூமியில் கட்டப்பபடுள்ளன.

கதிரமலை குன்றுகள் தோறும் குடியிருக்கும் குமரக் கடவுளின் படை வீடான கதிரமலையானது இங்குள்ள ஏழுமலைகளில் உயர்ந்து அமையப் பெற்றுள்ளது. கதிரமலை என பண்டைய நாமத் துடன் அழைக்கப்பட்ட போதும் இன்று ஏழுமலை எனும் நாமத்துடன் திகழ்கின்றது.

இதன் உயரம் 423 மீற்றராகும். இங்கு முத லில் சிவன் குடி கொண்டுள்ளதாகவும் பின்னர் சிவ பெருமான் தனது புதல்வனான முருகனுக்கு கதிர மலையைக் கொடுத்துவிட்டுச் சிவனொளிபாத மலைக்குச் சென்றதாகவும் ஒரு ஜதீகக் கதை யுள்ளது.

இந்தக் கதிரமலையான ஏழுமலையின் கிழக்கு சரிவில் இருந்து வள்ளிமலைக்குச் செல்லும் பாதை ஆரம்பமாகின்றது. இந்த வள்ளியம்மன் மலைக் குச் செல்லும் பாதை படிகள் அமைக்கப்பட்டு செப்ப னிடப்படாத போதிலும் மிக இலகுவாக மலையின் சிகரத்தை அடைய முடியும். அங்கு அழகிய சிறிய குகையினுள் அம்மன் வீற்றிருக்கின்றாள் இதை வள்ளி அம்மன் குகை என அழைக்கின்றனர்.

சூரன் கோட்டை (கிரிவிஹாரை) இங்கு சூரபத்ம னின் கோட்டை இருந்துள்ளதாகவும் முருகப் பெருமான் கதிரமலையில் வீற்றிருந்து சூரனுடன் யுத்தம் புரிந்ததாகவும் கூறப்படுகின்றது. தற்போது சூரன் கோட்டையில் காணப்படும் நீண்ட கற்தூ ண்கள் அவனது கோட்டையின் எச்சங்களாக இன்றும் காண முடிவதுடன் அருகில் ஓடிக் கொண டிருக்கும் மாணிக்க கங்கையில் நீராடுதலே தனிச் சிறப்பாகும். இலங்கையின் முருக தலங்களுள் தலைசிறந்ததாக உள்ள கதிர்காமம் அற்புதங் களும் சக்தியும் நிறைந்த இடம் என்றால் அது மிகையாகாது.







# பிரிக்ஸ் உச்சி மாநாடு ஆரம்பமானது: பிரேசிலில் மோடிக்கு உற்சாக வரவேற்பு

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் பிரிக்ஸ் உச்சி மாநாடு நேற்று தொடங்கியது. இதில் பங்கேற்ற பிரதமர் மோடியை உலக நாடுகளின் தலைவர்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர். முன்னதாக, விமான நிலையத்தில் ஏராளமான இந்தியர்கள் திரண்டு மோடிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பிரிக்ஸ் கூட்டமைப்பு 2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னா பிரிக்கா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

பிரிக்ஸ் கூட்டமைப்பின் 2 நாள் உச்சி மாநாடு பிரேசிலின் ரியோ டிஜெனிரோ நகரில் நேற்று தொடங்கியது. இதில் பங்கேற்பதற்காக அங்கு சென்றுள்ள பிரதமர் மோடிக்கு, ரியோ டி ஜெனிரோ விமான நிலையத்தில் ஏராளமான இந்தியர்கள் திரண்டு, உற்சாக வரவேற்பு அளித்தனர்.

உச்சி மாநாட்டின் முதல் நாளான நேற்று ‘சர்வதேச அமைதி, பாதுகாப்பு, சீர்திருத்தம், நிர்வாகம்’ குறித்த சிறப்பு கூட்டம் நடைபெற்றது.

இதில் பிரதமர் மோடி பங்கேற்றார். பிரேசில் ஜனாதிபதி லூலா டா சில்வா மற்றும் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் மோடியை ஆரத்தழுவி வரவேற்றனர்.

மாநாட்டின் 2 ஆம் நாளான இன்று சர்வதேச சுற்றுச்சூழல், சுகாதாரம் குறித்த சிறப்பு கூட்டம் நடைபெறுகிறது. இதிலும் பிரதமர் மோடி பங்கேற்கிறார்.

பிரிக்ஸ் மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் பங்கேற்கவில்லை. அவருக்கு பதிலாக, சீன பிரதமர் லி கியாங் பங்கேற்றுள்ளார். ரஷ்ய ஜனாதிபதி புடின் காணொலி வாயிலாக கலந்து கொள்கிறார். மாநாட்டில் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் மோடி விரிவான பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

# அஜித்குமார் விசாரணை அறிக்கை உயர் நீதிமன்றத்தில் நாளை தாக்கல்

## பல உண்மைகள் வெளியாகும் என எதிர்பார்ப்பு

தனிப்படை பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்த மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கு தொடர்பாக விசாரணை நடத்திய மதுரை மாவட்ட நீதிபதி, தனது அறிக்கையை நாளை தாக்கல் செய்கிறார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரம் பத்ரகாளி அம்மன் கோயில் காவலாளி அஜித்குமாரிடம், நகை திருட்டு தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தினர். அப்போது அஜித்குமார் மற்றும் அவரது சகோதரர் நவீன்குமார் ஆகியோரை பொலிஸார் தாக்கியுள்ளனர்.

பின்னர் நவீன்குமாரை விட்டு விட்டு, அஜித்குமாரை டி.எஸ்.பியின் தனிப்படை பொலிஸார் தாக்கியுள்ளனர். இதில் அவர் உயிரிழந்தார். இது தொடர்பாக தனிப்படை பொலிஸார் ராஜா, பிரபு, கண்ணன்,ஆனந்த், சங்கர மணிகண்டன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற மதுரை அமர்வு, மதுரை மாவட்ட நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ் விசாரணை நடத்தி, ஜூலை



8 ஆம் திகதிக்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டது.

அதன்படி, மாவட்ட நீதிபதி கடந்த 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதிவரை 4 நாள்கள் திருப்புவனம் நெடுஞ்சாலைத் துறை ஆய்வு மாளிகையில் விசாரணை நடத்தினார்.

ஏ.டி.எஸ்.பி. சுகுமாறன், பணியிடை நீக்கம் செய்யப்பட்ட மானாமதுரை டி.எஸ்.பி. சண்முகசுந்தரம், திருப்புவனம் அரசு மருத்துவமனை மருத்துவர் கார்த்திகேயன், பிரேதப் பரிசோதனை செய்த மதுரை அரசு மருத்துவமனை மருத்துவர்கள் சதாசிவம், ஏஞ்சல், அஜித்குமாரின் தாயார் மாலதி, சகோதரர் நவீன்குமார், பொலிஸார் தாக்கிய காட்சிகளை மறைந்திருந்து செல்போனில் பதிவு செய்த கோயில் ஊழியர் சக்தீஸ்வரன் உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்ட சாட்சிகளிடம் நீதிபதி விசாரணை நடத்தினார். பின்னர் திருப்புவனம் பொலிஸ் நிலையம், கோயில் அலுவலகத்தின் பின்புறமுள்ள கோசாலை ஆகிய இடங்களுக்கும் சென்று நீதிபதி ஆய்வு செய்தார்.

இந்நிலையில், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில், தனது விசாரணை அறிக்கையை மாவட்ட நீதிபதி ஜான்சுந்தர்லால் சுரேஷ் நாளை தாக்கல் செய்கிறார். இந்த அறிக்கையில் பல திடுக்கிடும் உண்மைகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஜூன் 28 ஆம் திகதி பொலிஸார் தாக்கியதில் தனக்கு உடல், கால்களில் வலி உள்ளதாக அஜித்குமாரின் சகோதரர் நவீன்குமார் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், உடல்நிலை பாதித்துள்ள அவரை, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உறவினர்கள் சேர்த்தனர். அங்கு அவருக்குசிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சைப் பின்னர் நவீன் குமார் நேற்று மாலையில் வீடு திரும்பினார்.



# அமெரிக்காவில் வரலாறு காணாத வெள்ளம்: 52 பேர் உயிரிழப்பு; 27 பேரை காணவில்லை

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கனமழை வெள்ளத்தால் இதுவரை 52 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் தென் மத்திய பகுதியில் டெக்சாஸ் மாகாணம் அமைந்துள்ளது. கடந்த சில நாட்களாக இந்த மாகாணத்தில் கனமழை பெய்து வருகிறது. கடந்த 4 ஆம் திகதி சில மணி நேரத்தில் 280 மில்லி மீற்றர் மழை பெய்தது. இதன் காரணமாக குவாடலூப் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. சுமார் 2 மணி நேரத்தில் நதியின் நீர்மட்டம் 29 அடி வரை உயர்ந்தது.

இதன் காரணமாக கடந்த 5 ஆம் திகதி டெக்சாஸ் மாகாணம், ஹில் கன்ட்ரி பகுதியில் குவாடலூப் நதிக் கரைகளில் இருந்த வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இதில் 37 பேர் உயிரிழந்தனர்.



மேற்கு கெர் பகுதியில் மாணவிகளுக்கான சிறப்பு முகாம் நடைபெற்றது. இதில் 750 மாணவிகள் தங்கியிருந்தனர். குவாடலூப் நதி வெள்ளத்தில் சிறப்பு முகாமின் கூடாரங்கள் அடித்துச் செல்லப்பட்டன. பெரும்பாலான மாணவிகள் பத்திரமாக மீட்கப்பட்டனர். 15 மாணவிகள் சடலங்களாக மீட்கப்பட்டனர். 27 மாணவிகளை காணவில்லை.

சுமார் 1,000 இற்கும் மேற்பட்ட மீட்புப் படை வீரர்கள் இரவு, பகலாக வெள்ள நிவாரண பணிகளில் ஈடுபட்டு உள்ளனர். ஹெலிக்கொப்டர்கள், ரோந்து படகுகள் மூலம் காணாமல் போன மாணவிகளை தேடும் பணி தீவிரமாக நடைபெறுகிறது.

அடுத்த சில நாள்களுக்கு டெக்சாஸ் மாகாணத்தில் கனமழை தொடரும் என்று அமெரிக்க வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் நதி கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

சர்வதேச அளவில் பருவநிலை மாறுபாடு பெரும் சவாலாக உருவெடுத்திருக்கிறது. இதன் காரணமாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் அதிக வெப்பம், அதிக குளிர், வரலாறு காணாத கனமழை என பெரும் பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

பருவநிலை மாறுபாடு காரணமாகவே தற்போது டெக்சாஸ் மாகாணத்தில் கனமழை, பெருவெள்ளம் ஏற்பட்டிருக்கிறது என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்தனர்.






# செங்கடலில் சென்ற சரக்கு கப்பல் மீது ஹவுதிப் படையினர் திடீர் தாக்குதல்

ஏமன் அருகே செங்கடலில் சென்று கொண்டிருந்த சரக்கு கப்பல் மீது துப்பாக்கிச்சூடு மற்றும் கையெறி குண்டுகளை வீசி ஹவுதி படையினர் திடீர் தாக்குதல் நடத்தியதில் கப்பல் தீப்பற்றி எரிவதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுனைடெட் கிங்டம் கடல்சார் வர்த்தக நடவடிக்கைகள் அமைப்பின் கூற்றுப்படி, இந்த சம்பவம் ஏமன் துறைமுகமான ஹொடைடாவிலிருந்து தென்மேற்கே 51 கடல் மைல் தொலைவில் நடந்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதத்திற்குப் பிறகு செங்கடல் கப்பல் போக்குவரத்து மீது ஏமனின் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் இந்த வருடம் நடத்திய முதல் தாக்குதல் இதுவாகும்

லைபீரியாவில் பதிவுசெய்யப்பட்ட மேஜிக் சீஸ் என்ற சரக்குக் கப்பலை ட்ரோன் படகுகள், ரொக்கெட் மூலம் இயக்கப்படும் கையெறி குண்டுகள் மற்றும் சிறிய ஆயுதங்களுடன் தாக்கினர். அந்தக் கப்பல் தற்போது தீப்பிடித்து எரிகிறது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே நடந்து வரும் போரில் பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக இந்த தாக்குதலுக்கு ஹவுதிகள் உரிமை கோரியுள்ளனர்.

கனடா முரசு
திங்கட்கிழமை | 07/07/2025

## கார் விபத்தில் ஒருவர் பலி

கனடாவின் எட்மோன்டனில் இடம்பெற்ற கார் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

வெள்ளிக்கிழமை மதியம் ஒரு ஹோட்டல் ஒன்றுக்கு அருகாமையில் கார் C02






# கனடாவில் சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

**கனடாவில் ஒரு வயதான சிறுமியொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.**

**ஒண்டாரியோ மாகாண பொலிஸாரின் தகவலின்படி, ஒரு வயது சிறுமி ஒருவர் வெள்ளிக்கிழமை காலை ஸெயிண்ட் லாரன்ஸ் ஆற்றில் உயிரிழந்தார்.**

**இந்த சம்பவம் கிங்ஸ்டனுக்கு தெற்கில் உள்ள உல்ஃப் தீவில் அமைந்துள்ள ஸ்டோனி பொயிண்ட் லேன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.**

சம்பவம் குறித்து காலை 9.30 மணி அளவில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீரில் மூழ்கிய குழந்தைக்கு குடும்பத்தினர் மற்றும் தீயணைப்பு படையினர் உடனடியாக உயிர்காக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதையடுத்து அந்த சிறுமி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டாலும், அங்கு சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார் என அதிகாரிகள் தெரிவித்தனர். "துயரத்தில் உள்ள குடும்பத்தின் தனியுரிமையை பாதுகாப்பதற்காக, அந்த சிறுமியின் விவரங்கள் வெளியிடப்படமாட்டாது," என ஒன்றாரியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் சந்தேகத்திற்கு இடமான பிரச்சினைகள் எதுவும் கிடையாது எனவும், இது ஒரு துயரமான விபத்து என்று சந்தேகிக்கப்படுகிறது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# கனடாவில் வேலை வாங்கித் தருவதாக பாரிய நிதி மோசடி; தீவிர விசாரணை

கனடாவில் வேலை பெற்றுத் தருவதாக கூறி இருவரிடம் 33 லட்சம் இலங்கை ரூபாவை மோசடி செய்த இருவரை கைது செய்ய இலங்கை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வாக்குறுதி வழங்கியதற்கமைய, வேலைகளை வழங்க தவறிய இரண்டு சந்தேக நபர்களை கைது செய்ய மத்துகம சிறப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இலங்கையின் அகலவத்தையை சேர்ந்த அமித் மஞ்சுள என்பவர் 13,70,000 இலங்கை ரூபாய் மோசடி செய்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரந்த கோசல திலகரத்ன என்பவர் 19,47,700 இலங்கை ரூபா மோசடி செய்ததாகக் கூறி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, மத்துகம சிறப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி தலைமை ஆய்வாளர் ஏ.எஸ். ரோஹணவின் வழிகாட்டுதலின் கீழ் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

# டிரக் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் ஹமில்டனில் உள்ள லிங்கன் அலெக்ஸாண்டர் வீதியில் இரவு ஒரு டிரக் மோதியதில் 47 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர் தனது டொயோட்டா யாரிஸ் காரை இரவு 8 மணிக்கு காரில் பயணம் செய்து, காரிலிருந்து வெளியேறிய பிறகு ஒரு டிரக் அவர் மீது மோதியதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்தார் என அதிகாரிகள் உறுதிப் படுத்தியுள்ளனர். மோதிய டிரக் ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே தங்கி இருந்து, தற்போது பொலிஸாருடன் முழுமையாக ஒத்துழைத்து வருகிறார்.

சம்பவ நேரத்தில் அந்தப் பகுதியில் சென்ற சாரதிகள் தங்கள் டாஷ் கேம்கள் மூலம் ஏதேனும் சாட்சியங்கள் உள்ளதா என்பதை சரிபார்க்க பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தகவல்கள் உள்ளவர்கள் 905-546-4753 என்ற எண்ணிலும், இரகசியமாக தகவல்களை வழங்க விரும்புவோர் 1-800-222-8477 என்ற எண்ணிலும் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# கனடாவின் ஹமில்டன் நகரில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகங்களில் இருவர் காயம்

கனடாவின் ஹமில்டன் நகரில் வார இறுதியில் நடந்த இரண்டு தனித்தனியான துப்பாக்கிச் சூட்டுகளில் இருவர் படுகாயமடைந்தனர். இது தொடர்பாக பொலிஸ் விசாரணை மேற்கொண்டு வருகிறது.

முதல் சம்பவம் சனிக்கிழமை மாலை 7:30 மணியளவில் பார்டன் ஸ்ட்ரீட் ஈஸ்ட் மற்றும் ஹார்மனி அவென்யூ அருகே இடம்பெற்றுள்ளது.

மேற்குப் பக்கம் சென்று கொண்டிருந்த ஒரு வாகனத்தின் மீது இரண்டு சந்தேகநபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன் பின், வாகன ஓட்டுனர் அருகிலுள்ள ஒரு வணிக வளாகத்திற்கு சென்று பொலிஸை அழைத்துள்ளார். இந்த சம்பவத்தில் ஒருவர் கடுமையாக காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த தாக்குதல் முன்னோக்கி திட்டமிட்டது என்ற சந்தேகம் உள்ளதாகவும், இது இலக்குவைத்து நடந்த தாக்குதலாக இருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பார்டன் ஸ்ட்ரீட் ஈஸ்ட், பிரிட்டானியா அவென்யூ, ஹார்மனி அவென்யூ, ஃபெட்ரிக் அவென்யூ மற்றும் டிரஜினா அவென்யூ பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களும், வணிக நிறுவனங்களும் தங்களின் கண்காணிப்பு கேமராக்கள் அல்லது டாஷ் கேமரா வீடியோக்களில் சந்தேகநபர்களைக் கண்டிருக்க வாய்ப்பு இருப்பதால், அவற்றை சரிபார்க்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

இதேவேளை, இரண்டாவது சம்பவம், ஞாயிறு அதிகாலை 3:20 மணியளவில் ஃபிளாம்பொரோ பகுதியில் உள்ள ஹைவே 6 மற்றும் கான்சஷன் ரோடு 6 மேற்கு அருகேயுள்ள ஒரு குறுகிய கால வாடகை வீட்டில் நடந்த கொண்டாட்டத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்விலும் ஒருவர் கடு மையாக காயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் சந்தேகநபர் தொடர்பான விவரங்கள் எதுவும் இதுவரை தெரியவில்லை.

தகவல்கள் உள்ளவர்கள் 905-546-4883 என்ற எண்ணில் ஹமில்டன் பொலிஸாரை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் பாதுகாப்பு கேமரா அல்லது டாஷ் கேம் பதிவுகளை பரிசோதிக்குமாறும் பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.




## கார்...

( C01 தொடர்ச்சி)

மோதியதில் 53 வயதுடைய ஓட்டுனர் உயிரிழந்துள்ளார் என எட்மண்டன் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த ஒரு வாகன விபத்து மையமாகிய சம்பவம், 109 ஆவது அவென்யூ மற்றும் மேஃபீல்ட் சாலை சந்திப்பில் மதியம் 12:30 மணியளவில் இடம் பெற்றது.

அவசர சேவை குழுவினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து, அந்த நபருக்கு சிகிச்சை அளித்தாலும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் வேறு யாரும் காயமடையவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த விபத்து குறித்து பொலிஸ் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகிறது.

